J. R. T. S. 1870. No. 5.

# RESURRECTION.

## உயிர்த்தெழுதல்.

### ௧. உயிர்த்தெழுதல் உண்டென்று விவிலிய வேதம் மாத்திரமே வெளிப்படுத்துகின்றது.

விவிலியவேதத்தை அறியாதிருந்தும் அறிவிவேகிகளாயிருந்த கல்விமான்களுக்குட் சிலர், சரீரத்திலும் ஆத்துமா மேன்மையானதென்று உணர்ந்து, சரீரத்தையின்றி ஆத்துமா சீவிக்குமென்று அனுமானித்ததனால், சரீரம் மரித்தபின்பு ஆத்துமா சீவிக்குமென்று எண்ணினார்கள். அதை நிச்சயிக்க அவர்களிடத்தில் வேதமில்லை. சரீரம் மரித்தபின் ஆத்துமா சீவிக்குமென்ற நம்பிக்கை ஓர் சந்தேக உத்தேசமேயன்றி வேறொன்றல்ல. அது சத்தியமாய் அல்லது அசத்தியமாயிருக்கலாம். ஆனால் அதை விவிலிய வேதமோ நிச்சயிக்கின்றது. "நம்முடைய சமய குருவும் இரட்சகருமாகிய யேசுக்கிறிஸ்து மரணத்தைச் செயித்துச், சுவிசேஷத்தினால் சீவனையுஞ் சாவாமையையும் வெளிப்படுத்தினார்" என்று ௨தீமோத் ௧: ௰ வசனத்திற் காணப்படுகிறது.

மேலே சொன்ன கலைஞானிகள், மரணத்தின்பின் ஆத்துமா சீவிக்குமென்று உத்தேசித்தாலும், சரீரம் எழுப்பப்பட்டு, ஆத்துமாவுடன் மறுபடி இணைக்கப்படுமென்ற சத்தியம் அவர்களுடைய புத்தியிற் தோன்றவேயில்லை. இதை விவிலிய வேதமே போதிக்கின்றது. "யேசு நானே உயிர்த்தெழுதலுஞ் சீவனுமாயிருக்கிறேன்" என்கிறார். யோவான், ௧௧: ௨௫. அவர் உயிர்த்தெழுதலுக்குமாத்திரங் காரணரல்ல, சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்கும் ஆத்துமாவின் சீவியத்துக்குங் காரணர்.

மேலும், யோபு ௧௯: ௨௭. எசாயா ௨௬: ௧௯. யோவான் ௫: ௨௮, ௨௯ வாசிக்க.

## ௨. தேவனுடைய கிரியைகளுள் உயிர்த்தெழுதலே மகா ஆச்சரியம்.

இந்தச் சரீரத்தைப்போன்ற வேறொன்றல்ல, இந்தச் சரீரமே எழுந்திருக்கும். கடைசிநாளில் சிருஷ்டிப்பல்ல, உயிர்த்தெழும்புதலே இருக்கும். "என் தோல் நீங்கியபின்பு என் மாமிசங் கெடாய்ப் போனாலும், நான் சரீரத்தை உடையவனாகித் தேவனைத் தரிசிப்பேன். அந்நியன் கண்ணல்ல, என் சுய கண்ணினாலே காண்பேன்." யோபு, ௧௯: ௨௬, ௨௭. என்னுடைய தேகஞ் சேமிக்கப்படுமிடம் எங்கே, எவ்விடமென்பதை நான் அறியேன். ஆனால், என்னுடைய சரீரத்தைச் சேர்ந்திருக்குந் தாதுகளும், உறுப்புகளும், பிரிக்கப்பட்டு, இங்குமங்குமாக எத்திசையிலுஞ் சிதறடிக்கப்படுமென்று நான் நன்றாயறிவேன். என்றாலும், என்னுடைய ஆத்துமா மறுபடி வசிக்கிறதற்கு இவைகளெல்லாந் திரும்பச் சேர்க்கப்பட்டு ஓர் ஆவியான வீடாக்கப்படும். சருவஞ்ஞருடைய கண்கள் இம்மாறுதல்களையெல்லாம் நோக்குகின்றன. சருவவல்லவருடைய சத்தம் நியமித்த காலத்தில் இவ்வணுக்கள் எல்லாவற்றையும் முந்தின சேர்மானத்துக்கு வரும்படி அழைக்கும். இப்படி ஒருவனை மாத்திரம் எழுப்புகிறதேயாகில் எவ்வளவோ ஆச்சரியம். ஆனால் இப்படி ஒருவனை மாத்திரமல்ல, எக்காலத்திலுஞ் சீவித்து, மரித்த எண்ணிறந்த சனங்களையும் எழுப்புகிறது ஆச்சரியத்துள் ஆச்சரியமல்லவா? இவ்வெண்ணிறந்த சரீரங்களின் அணுக்கள் பற்பல தாபர சங்கமங்களிலும் பல பூதியங்களிலும், சேர்ந்திருந்தாலும் மறுபடி கூட்டிச் சேர்க்கப்படும். ஆனால் இவைகளில் அற்பமேனும் இழந்துவிடப்படாமல் ஒவ்வொன்றுங் கடைசி எக்காளத்தொனியில் எழுந்திருக்கும். ௧ கொரிந்தியர், ௧௫: ௫௨. மெய்யாகவே, தேவன் மரித்தோரை உயிர்த்தெழும்பப் பண்ணுகிறதென்றது ஆராயக்கூடாத இரகசியமே.

## ௩. உயிர்த்தெழுதலுக்கத்தாட்சி விவிலிய வேதத்தில் மாத்திரமே உண்டு.

இப்போதனை ஓர் பரம இரகசியமாயிருப்பதால், அதை விசுவாசிக்கிறதற்கு அதிபெலமான நியாயங்கள் வேண்டும். அவை யாவை? ௧ கொரிந்தியர், ௧௫ ல், பவுலும் மற்றை வேதகருத்தாக்களும் சொல்லியிருக்கிற நியாயத்தையன்றி வேறில்லை. உயிர்த்தெழுதல் முழுவதும் ஓர் அற்புதமாதலால், பவுல் அதை யுத்தியைக் கொண்டு உரூபிக்கவில்லை; மேலே சொல்லிய அதிகாரத்திலிருக்குந் திருஷ்டாந்தங்களினால் பொருட்கள் யாவும் அழியாதபடி மகிமையுள்ளவைகளாக மாற்றப்படுமென்பதையே காண்பிக்கிறார். மேலுங் கிறிஸ்து மரித்தோரை விட்டெழுந்தபடியினால் மரித்தோர் எல்லாரும் எழுந்திருப்பார்களென்று திருஷ்டாந்தப்படுத்துகிறார். அன்றியும் ஓர் மரித்த சரீரத்தை எழுப்பினவர் எல்லாச் சரீரங்களையும் எழுப்பக்கூடும். கிறிஸ்து உயிர்த்தெழுந்தாரென்ற சத்தியத்தை ஏற்றுக்கொண்டால் எல்லாரும் எழுந்திருப்பார்களென்ற போதனையையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆனால் அந்தச் சத்தியத்தை உரூபிப்பது எங்கள் நோக்கமல்ல. கிறிஸ்து மரித்தோரிலிருந்து, எழுந்தாரென்பதை நிச்சயித்துக் காட்டுகிற வேதம் தேவனால் அருளப்பட்டதென்று விசுவாசிக்கிறவர்களுக்கே நாம் இவைகளைச் சொல்லுகிறோம். வேதஞ் சத்தியமென்றால், கிறிஸ்து உயிர்த்தெழுந்ததுஞ் சத்தியமே. வேதம் பொய்யென்றால், கிறிஸ்து உயிர்த்தெழுந்ததும் பொய்யே. ஆனால் நாம் வேதத்தை நன்றாய் ஆராய்ந்து, அதை மெய்யென்றறிந்தபின் கிறிஸ்து மரித்தோரைவிட்டெழுந்து நித்திரையடைந்தவர்களின் முதற்பலனானார் என்று கெம்பீர சத்தத்துடன் சொல்லுகிறோம்.

(௧) எல்லாருடைய உயிர்த்தெழுதலுக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே அச்சாரமாயிருக்கின்றது.

௧ கொரிந்தியர், ௧௫: ௨௦.

(௨) எல்லாருடைய உயிர்த்தெழுதலுக்கும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே காரணம்.

உரோமர் ௯: ௧௧. மீட்பின் தொழிலை முற்றுப்பெறப் பண்ணினதும் அதுவே.

(௩) கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே எல்லா மனுஷருடைய உயிர்த்தெழுதலாம். யோவான் ௧௧: ௨௫ல் "யேசு நானே உயிர்த்தெழுதலென்கிறார்." இதெப்படி? ஆதாமின் மரணம் எல்லாருடைய மரணத்துக்குங் காரணமாய் இருந்ததுபோலவே, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் நமது உயிர்த்தெழுதலுக்குங் காரணமாயிற்று. ஆதாம் எங்களுக்குத் தலை. எங்கள் தலையாகவே அவன் பாவம் செய்தான். தலையாகவே விழுந்தான். அவ்விதமாகக் கிறிஸ்துவும் எங்கள் தலையாய், எங்கள் தலையாக மரித்து, எங்கள் தலையாக உயிர்த்தெழுந்தார். இவ்வித சம்பந்தத்தினாலேயே பிரேதக்குழிகளிலுள்ள யாவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங் காலம்வரும். அப்பொழுது நற்கிரியை செய்தவர்களும் துற்கிரியை செய்தவர்களும் உயிர்த்தெழுந்து புறப்படுவார்கள். எபிரேயர், ௨: ௧௪.

௪. உயிர்த்தெழுதல் தேவ வல்லமையினால் ஆகின்றது.

நீங்கள் வேதத்தையும் தேவனுடைய வல்லமையையும் உணராதபடியால் தப்பாய் எண்ணங் கொள்ளுகிறீர்கள். உயிர்த்தெழுதலில்லையென்று சொன்ன சதுசேயரை யேசுநாதர் கடிந்துகொண்டார் என்று மத்தே. ௨௨: ௨௯. தேவன் மரித்தோரை உயிர்த்தெழும்பப்பண்ணுகிறது நம்பப்படாதென்று நீங்கள் எண்ணுகிறது எப்படியென்று பவுல் கேட்கிறார். மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்களென்று நீ கேட்கிறாயா? இரவின் பின் பகலும், மாரியின் பின் கோடையும், விதைப்புக்காலத்தின்பின் அறுப்புக்காலமும் எப்படி வருகிறதென்று சொல்வார்களா? அது தேவ சித்தம். தேவன் தமக்குச் சித்தமானதைச் செய்யக்கூடுமென்பதே மறுமொழி. பிரேதவறை தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவிக்குமாவென்று வினவினால், ஆமென்கிறோம். தேவன் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தும்படி மிகுந்த வல்லமையுடையவராகையால் அவர் அப்படிச் செய்வார்.

Printed for the Jaffna Religious Tract Society, by Strong & Asbury, Jaffna, 1870.
Edition, 5 000.